Registered No. M. 1159.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.

மலர் 5. | காலயுத்திஸு மாசிமீ-1919ஸு பிப்ரவரிமீ | இதழ் 2.

உள்ளுறை.


| | பக்கம். |
|---|---|
| சிவகாமியம்மையார் துதி ... ... ... | 24 |
| சிவஞானபோதம் ... ... ... | 28 |
| மார்கழித் திருவாதிரை மகோற்சவ பிரபாவம் ... | 32 |
| அர்ச்சாதீபம் ... ... ... | 36 |
| திருமுறைப்பெருமை ... ... ... | 41 |
| ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் ... ... | 45 |


இஃது

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

பத்திரிகாசிரியர்

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department.)

நெ. 43, பாளையப்பன்வீதி, ஏழுகிணறு, சென்னை.

வைதிக சைவ அச்சுக்கூடம்,

நெ. 292, தங்கசாலை வீதி, சென்னை.

1919

தபாற்செலவு உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்று.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

## போஷகர்கள்.

ஸ்ரீமான்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்,
Dubash, Messrs. Best & Co.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
Official Referee, High Court.

,, ராவ்சாஹிப் - பி. மாசிலாமணி முதலியாரவர்கள்,
Engineering Contractor.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்,
Retired Presidency Post Master.

,, வி. முத்தையா பிள்ளையவர்கள்,
Merchant, Periyanna Moodaly Street, Madras.

,, ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்,
Snuff & Tobacco Merchant, Madras.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள்,
Retired Sub-Engineer, Mint Street.

,, C. தருமலிங்கமுதலியாரவர்கள்,
Contractor, Mint Street, Madras.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்து 20-வது ஆண்டின் மகாஜனக்கூட்டம்.

இது நிகழும் 1919ஆம் மார்ச்மீ 23௳ நடைபெறும். அச்சமயத்தில் இச்சபையினரியாவரும் வந்து சிறப்பிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

---

## விளம்பரங்கள்.

### சைவம். முன்மலர்கள்.

பலர்வேண்டுகோளின்படி (1915, 1916)ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இப்பத்திரிகையின் முதலிரண்டுமலர்கள் இரண்டாம்முறை அச்சிடப்பட்டு இப்போது விற்பனைக்குச் சித்தமாயிருக்கின்றன. தபாற்செலவு உட்பட சந்தாதாரர்களுக்கு மலர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரூபாவுக்கும், மற்றவர்களுக்கு 1¼-ரூபாவுக்கும் வி. பி. தபாலில் அனுப்பப்படும்.

மூன்றுமலரின் சில இதழ்கள் இருப்பில்லாமையால் அவைமீண்டும் அச்சிட்டபின்னரே மூன்றும்மலர் வேண்டுவோர்க்கு அனுப்ப இயலும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 5. | காலயுத்தி௵ மாசி௴—1919௵ பிப்ரவரி௴ | இதழ் 2

## சிவகாமியம்மையார் துதி. *

உலகமெலா மீன்றருளி யொருமலைக்கு மகளாகி
யிலகுமயி லிளையோற்கு மிபமுகற்கும் பாலூட்டு
முலையினைய கன்னிகையாய் முகிழ்த்தபெருங் கருணையளாந்
தொலைவில்புகழ்ச் சிவகாம சுந்தரிசெந் தாள்பணிவாம்.

(இ-ள்.) உலகம் எல்லாம் ஈன்று அருளி = பிரபஞ்சங்க ளெல்லாவற்றையும் பெற்றருளியும், ஒரு மலைக்கு மகள் ஆகி = ஒப்பற்ற இமயமலை யரசனுக்குப் புத்திரியாகத் திருவவதாரஞ் செய்தும், இலகும் அயில் இளையோற்கும் இப முகற்கும் = பிரகாசிக்கின்ற வேலாயுதத்தை யுடைய முருகக்கடவுளுக்கும் யானைமுகமுடைய விநாயகக் கடவுளுக்கும், பால் ஊட்டும் முலையின் ஐய கன்னிகை ஆய் = ஞானப்பாலை யுண்பிக்கின்ற போதானந்த வடிவாகிய தனங்களை யுடைய அழகுள்ள கன்னியாகியும், முகிழ்த்த பெரு கருணையள் ஆம் = விளங்கித் தோன்றுகின்ற பெரிய திருவருட் சத்தியாராகிய, தொலைவு இல் புகழ்சிவகாமசுந்தரி = கெடுதலில்லாத பெரும்புகழினை யுடைய சிவகாம சுந்தரியாரது, செம் தாள் பணிவாம் = செவ்விய திருவடிகளை (யாம்) வணங்குவாம்.

உலகம் என்பது, லுக் (காணல்) என்னுந் தாதுவினின்றும் பிறந்த வடமொழியாகலின் காணப்படுவது என்று பொருள் கூறுவர் சிலர். உலகம் என்பதை "காலமுலகம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், "வடசொல் அன்று, ஆசிரியர் வடசொற்களை யெடுத்தோதி யிலக்கணங் கூறு

* இத்துதி பட்டினத்துப்பிள்ளையார் புராணத்திலுள்ளது. இவ்வுரை மகாவித்வான், நா-கதிரைவேற் பிள்ளையவர்கள் இயற்றியது.

ராகலின், அது மக்கட்டொகுதியை யுணர்த்தியதாயின் உயர்திணையாயும், இடத்தை யுணர்த்தியதாயின் அஃறிணையாயும் வருதலின் ஒரு சொல் இருபொருட் கண்ணுஞ் சென்றதெனவும்படாது. இருசொல் எனவே படும். ஆகுபெயரன்று" என்றுரைப்பர். காணப்பட்ட காரியமாகிய அதனைக்கொண்டு, காணப்படாத காரணமாகிய கடவுளை யநுமிப்பர் பெரியோர். ஈண்டு உலகமென்றது அவன் அவள் அது வெனச் சுட்டி யுணரப்படுஞ் சேதன அசேதனப் பிரபஞ்சங்களையாம். சேதனமாகிய உயிர்களும், அசேதனமாகிய பூதாதிகளும் நித்தியமாகலின் அவற்றைப் பிறப்பித்தல் யாங்ஙனமெனின், முதற்காரணத்தி லொடுங்கிநின்ற வவற்றை வெளிப்படுத்தலே யீண்டுப் பிறப்பித்தன் மேற்று. கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கய மென்றாற் போல மாயையிற் றோன்று முலகத்தை, அதற் காதாரமாய் நின்ற இறைவியிற் பிறந்ததென்றார். பிறப்பித்த லெனவே நிற்பித்தலும் அழித்தலுமாகிய இரண்டுமாக, உலகம் மூவினை யுடைத் தென்றல் பொருந்தா தென்னும் மீமாஞ்சகனும், உலோகாயதனும், மூவினையுடைத் தாயினுந் தோற்றுவிக்கும் நிமித்த காரணப்பொருள் வேண்டுவதின்று தத்தஞ் சார்பிலே தோன்று மென்னும் பௌத்தனும், உள்பொருளாய உலகம் முதற்காரணத்தினின்றுந் தானே தோன்றி யழியும், நிமித்தகாரணன் வேண்டா வென்னுஞ் சாங்கியனும், உலகம் அழிந்தபின் பரமாணுக்கள் தாமே கன்ம மேதுவாகத் தோன்றிநின் றழியும் என்னும் அணுகாரணவாதிகளாகிய சௌத்திராந்திகன், வைபாடிகன், ஆசீவகன், தார்க்கீகன் என்பவர்களும், மறுபிறப்புச் சடப்பொருள்களுக் கன்றிச் சித்துப்பொருளாகிய வான்மாக்கட்கில்லை; குடமுடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கிய வழி உயிர் பிரமத்தோடு கூடும்; மீளப் பிறக்கா என்னுங் கிரீடாப்பிரமவாதியும், இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்து முற்பத்தி யின்மையால், அதற்கு மாறாக உலகம் பிரமத்தினிடத்து இல்பொருளாகத் தோன்றும் என்னும் விவர்த்தவாதியாகிய மாயாவாதியும், இல்லது முள்ளது மல்லாத பொருளே தோன்றும் என்னுஞ் சூனியவாதியும், இல்லது முள்ளது மாய பொருளே தோன்றும் என்னும் அநேகாந்த வாதியும் மறுக்கப்பட்டனர். இதனானே உலகம் மூவினை யுடைத்தென்பதும், அதனான் உள்பொருளென்பதும், காரியப் பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப் பிரபஞ்சம் அவித்தையாற் கட்டப்பட்டுச் சுட்டுணர் விற்றாய் நிற்ற

லா னும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு வேறொரு முதல் வேண்டு மென்பதும், அது இறைவனுக்கு வேறல்லாத சிவசத்தி யென்ப தும் வலியுறுத்தப்பட்டன. ஈன்றருளி-இதில் அருள் என்பது உயர்வுபற்றிய துணைவினை. இமயமலை யரசனுக்குப் புத்திரியாயது தாக்ஷாயிணி என்னும் பெயரை நீக்கவும், அவன் றவத்திற்காகவும், இல்லற மியலுதற்குமாம். இலகு மயில் என்பதற்கு விளக்கமமைந்த மயில் என்னாது வேல் என்றது சிறப்புப்பற்றி. என்னை? மயில் வருவதற்கு அயில் காரணமாகலானும், பிரகாசமுடைத்தாய இறை வனது ஞானசத்தி யது வாகலானுமாம். அதனை "அந்தமி லொளி யின் சீரா லறுமுகம் படைத்த பண்பா-லெந்தைக ணின்றும் வந்த வியற்கையாற் சத்தி யாம்பேர்-தந்திடும் பனுவல் பெற்ற தன்மை யாற் றனிவேற் பெம்மான்-கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்." என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தா னு மறிக. பின்னவராகிய முருகக் கடவுளைப் பிற்கூறாது முற்கிளந்தது தந் தைக்கு மூத்தபிள்ளையின் மாட்டும், தாய்க்கு இளையபிள்ளையின் மீதும் அன்பு சிறக்கும் என்னும் உலகியல்பற்றி. இளையோன்- இதனை முறைப்பெயராகக் கொள்ளாது பண்புபற்றிய பெயராகக் கொள்ளின், இளமைப்பருவ முடையவனெனல். உடம்பு முதிர்ந்து கரணங் கெட்டு அறிவு ஒழிந்திறக்கு மேனைத் தேவர்கள் போலாது தான் என்று மறிவானு மழகானு முதிராப்பதி என்பதை விளக் கவே கதிரைநாயகன் பாலப்பருவங் கொள்ளு மென்க. ஏனைய தேவர் முதலாய உயிர்வர்க்கத்தார்க்கு அவ்வவரளவின்படி பத்தா மாண்டில் இளமையும், உ0-ல் வளர்ச்சியும், ௩0-ல் அழகும், ௪0-ல் அறிவும், ரு0-ல் சரீரபலமும், ௬0-ல் தாதுவிருத்தியும், எ0-ல் நேத் திரமும், அ0-ல் செவியும், ௯0-ல் மனமும், க00-ல் சீவனுங் கெடு மெனலால், அங்ஙன மில்லாத விசுத்ததேக முடையவனென்பதும், இயற்கை ஞானமுடையா னென்பதும், உடற்றிரிபு, இடத்திரிபு அறிவுத்திரிபு இல்லாதவ னென்பது முணர்த்தியவாறு. இவற்றை, "கண்ட நனவை" என்னுஞ் சிவஞானபோத சூத்திரத்தும், தணி கைப் புராணத்துங் காண்க. இளையோற்கும் இப்முகற்கும் என ஒருமையாயிருந்த பாடத்தை, இலக்கணவழுவுற இளையோர்க்கும் இபமுகர்க்கும் எனப் பன்மை விகுதிப் படுத்தினரு முளர். ஏனை யிடங்களினெல்லாம் ஒருமையாற் கூறியிருக்க இங்ஙன் அவைகட்கு மாறுக் காரணமின்றி வழுவுறத் திருத்தல் பொருந்தாது. இளையவற் கன்றி யானைமுகற்கும் பாலூட்டியது,

"ஒருமுலை சுரந்த தீம்பா லுண்புழி மழலைத் தீஞ்சொன்
முருகனுக் கென்றே யீன்ற முதல்விவைத் திருந்த மற்றைத்
திருமுலை வருடு வான்போற் றிரள்புழைக் கரத்தா லுண்ணும்
வரிநுதற் களிற்றின் செந்தா மரையடி வணக்கஞ் செய்வாம்.

என்னுஞ் சங்கரநாராயணர் கோயிற்புராணச் செய்யுளானு முண ரத்தக்கது. இறைவி தனங்களென்று மொருநீர்மையனவாய், அமல போதானந்த மயமாய், உண்ணப்படாதனவா யிருத்தலின் "ஊட்டு முலையின்" என்றார். முகிழ்த்தல்-அரும்புதல். இறைமைக் குணங் கள் இலராயினரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராமே அழிதன் மாலைய வாகலின், இறைவி புகழே தொலைவில் புகழெனப்பட்டது. புகழ்-ஆகுபெயர். அஃதா வது உலகின்கணென்றும் இறவாது நிற்குங் கீர்த்தி. இது அருட் கொடை பற்றியதனால் வந்தது.

---

## சிவஞானபோதம்.

### ஏழாஞ் சூத்திரம்.—முதலதிகரணம்.

(16-வது பக்கத் தொடர்ச்சி.)

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியாது.

(இ-ள்.) வாக்கு மனாதீதமாகிய சிவத்தின் சந்நிதியில் உண ருருவாகிய அசத்தெல்லாம் பாழாகலின், சத்தாகிய சிவம் அசத் தாகிய பிரபஞ்சத்தை யறிதல் செய்யாது. (எ-று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்—அரன் பாசத் தை யநுபவியான்.

2-வது—ஐயப்பாடு—பிரபஞ்சம் அரனால் அறியப்படுவதோ அறியப்படாததோ.

3-வது—பிறர்கூறும் பக்கம்—பிரபஞ்சம் சிவனுக்குத் திருமே மேனியாகவும், மாயை சத்தியாகவும் விளங்கும் எனச் சுருதிகள் கூறுவதனாலும், சத்தின்முன் அசத்தெல்லாம் சூனியம் என்பது அவசித்தாந்தமாய் (அதாவது சைவ சித்தாந்தத்தோடு முரணி) மாயாவாதிக்கூற்றாய் முடியுமாதலினாலும், முற்றுணர்வுடைய முதல்

வனுக்குப் பிரபஞ்சத்தைச் சுட்டியறியும் சுட்டுணர்வும் உண்டு என்பதனுல் வருவதோர் குற்றமில்லாமையாலும் பிரபஞ்சம் முதல்வனுல் அறியப்படும் பொருளே. (இவ்வாறு கூறுவோர் சிவாத்துவித சைவர்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—சிவசத்தின் முன் அசத்தாகிய பிரபஞ்சம் சூனியம் என்றது, பிரபஞ்சம் மாயாவாதிகள் கூறுவதுபோல் இல்பொருளா மென்று கூறவந்ததன்று. சிவத்தின்முன் பிரபஞ்சம்விளங்கித் தோன்றுதென்பதே அதன் பொருள். விளங்கித் தோன்றுதென்பதும், பிரகாசியாதென்பதும், முனைத்திடாதென்பதும், ஒருபொருளன. விளங்கித்தோன்றுமை யாவது இது குடம் இஃது ஆடை என நம்மவரால் சுட்டியறியப்படுவது போல் முதல்வனுற் சுட்டியறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். ஆதலால் சத்தெதிர் யாவையுஞ் சூனியம் என்பது அவசித்தாந்தமாகாது. முற்றுணர்வுடைய முதல்வனுக்குச் சுட்டுணர்வும் உண்டு என்பதனுல் வரும் தோஷம் என்னையோவெனில், முதல்வனுடைய முற்றுணர்வு தன்னியல்பாகிய இயற்கையுணர்வாம். இது இடையே நீங்குதலின்றி எக்காலத்தும் நிலைபெற்றிருப்பதனுல் மெய்யுணர்வாம். சுட்டுணர்வாவது பொதுவியல்பாகிய செயற்கையுணர்வாம். இது இடையேதோன்றி மறைவதனுல் பொய்யுணர்வாம். ஆதலால் முதல்வனுடைய தன்னியல்பாகிய இயற்கை யுணர்வின்முன் பொதுவியல்பாகிய சுட்டுணர்வு பிரகாசியாது. அன்றியும், அசத்தையறிவதாகிய ஏகதேச உணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃது இல்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவதன்றி இழுக்காகாது. இவ்வேதுக்களால், சத்தாகிய சிவத்தின்முன் அசத்தாகிய பிரபஞ்சம் விளங்கித் தோன்றுதென்பது துணியப்படும்.

5-வது—இயைபு.

## உதாரண வெண்பா.

அன்னியமி லாமை யரற்கொன் றுணர்வின்று
மன்னியமி லானசத்தைக் காண்குவனே—லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று.

(இ-ள்.) அன்னியம் இலாமை அரற்கு=(தன்னுள் வியாப்பியமான, அஃதாவது தன் வியாபகத்தினுள் அடங்கிநிற்கும், பசுபாசங்களோடு) வேற்றுமையின்றி உடனுய் நிற்றலையுடைய முதல்

வனுக்கு—உணர்வு=சுட்டி யுணரக்கிடப்பதாகிய ஒருபொருள்—இன்று ஆம்=இல்லை. (ஆகலான்)—அன்னியமிலான்=அத்தன்மையனாகிய முதல்வன்—அசத்தைக் காண்குவனேல்=அசத்தாகிய பிரபஞ்சத்தை யறியலுறுவானாயின்—அன்னியமாக்காணான்=(அறிந்தாங்கறிவனன்றி நம்மனோர்போல்) வேறாகச்சுட்டியறிவானல்லன்--கதிர்முன் இருள்போல=சூரியன் முன் இருள் விளங்கி நில்லாதது போல—அவன்முன்மாணா அசத்து இன்மை=அம்முதல்வனெதிர் நன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாது ஆகலான். (எ-று.)

இவ்வதிகரணத்தால் வாக்கு மனாதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில் உணருருவாகிய அசத்தெல்லாம் பாழேயாகலாற்சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை யறிந்து அநுபவியாது என்பது விளக்கப்பட்டது.

---

## இரண்டாமதிகரணம்

### அசத்திலதறியாது.

(இ-ள்.) அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாதலினால் சத்தாகிய சிவத்தையறியாது. (எ-று.)

இதில் 1-வது—தனனாற்கூறப்படும் பொருள்—பாசம் அரனை அநுபவியாது.

2-வது—ஐயப்பாடு—கரணத்திற்குச் சிவத்தையறியும் அறிவு உண்டோ, இல்லையோ.

3-வது—பிறர்கூறும் பக்கம்—சத்தாகியசிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை யறியாதாயினும், அசத்தென்று சொல்லப்படும் தனு கரணம் புவனம் போகம் என்னும் நான்கினுள் ஒன்றாகிய கரணமானது, விளக்குப்போல் விகாரமின்றி நிற்கும் ஆன்ம சந்நிதியில், பெத்த நிலையில், அசத்தாகிய விடயங்களை யறிந்தாற்போல், முத்தி நிலையில் சிவகரணமாய் நின்று சிவத்தையறியும். ஆன்ம சந்நிதியில் சடமாகிய கரணத்திற்கு அறிவு உண்டாதல் எதுபோலுமெனின், கண்ணாடியின் சந்நிதியில் அதன்நிழலுக்குப் பிரகாசம் உண்டாவது போலும். அன்றியும், பதிஞானமும் பசுஞானமும் போல பாசஞானமும் ஒன்று உண்டெனப்படுதலால், பாசத்தை அறிவுடையதன்று என்றல் பொருந்தாது. ஆதலால் பாசம் சிவத்தையறியும் என்றல் அமையும். (இவ்வாறு கூறுவோர்சிவசங்கிராந்தவாதிகள்)

சிவசங்கிராந்தமாவது:—ஆன்மாவின் சந்நிதியில் காந்தபசாசம்போல் (அதாவது சாந்தத்தையடுத்த இரும்புபோல்) உடல் இயங்க, அதன்கணின்று கருவிகளே விடயங்களை யனுபவிக்கும், மலம் நீங்கிய விடத்து, கண்ணாடியில் முகவொளி தோற்றுமாறுபோல முதல்வன் திருவருள் ஆன்மாவினிடத்துச் சங்கிரமித்துத் தோன்றும். அப்போது, உப்பளத்திலிட்டவை யெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மாச் சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தையறியும் என்பதாம்.

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு—பாசஞானம் என்பதை தூலமாய் நோக்கும்போது அசத்துக்கு அறிவு உள்ளதுபோல் தோன்றும். சந்தேக விபரீதமின்றி குற்றமற்ற காட்சியால் ஆராயுமிடத்து அதன்கண் அறிவில்லாமை விளங்கும். பாசம் வாயிலாக உயிரின்கண் நிகழும் ஞானமே பாச ஞானம் என உபசரித்துக் கூறப்படுவதனால், அதனைப் பாசத்திற்குள்ளதாகிய ஞானம் என்று கொள்ளல் அறியாதார் கூற்றாம். அன்றியும் கண்ணாடியின் ஒளி நிழல்பேலத்தோன்றினதேயன்றி ஒளியின் வேறாய் நிழலென ஒன்றில்லாமையால், உயிரின் சந்நிதியில் கரணம் அறியும் என்பதற்குக் கூறிய உவமை பொருந்தாது. ஆதலால் பாசம் சிவத்தை யறியாதென்பது துணியப்படும்.

5-வது இயைபு.

## உதாரண வெண்பா.

பேய்த்தேர் நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதெனக் காண்.

(இ-ள்.) பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு=(பாலைநிலத்திற் காணப்படும் கானல் ஆகிய) பேய்த்தேரை நீர் என்று கருதி (அதனையுண்ண) வருகின்ற (தாகவிடாய் உடைய) அறிவில்லாதவனுக்கு—மற்று அணைந்த பேய்த்தேர்—(அதனையடுத்தபோது) தன்னால் அணையப்பட்ட அப்பேய்த்தேர்—அசத்து ஆகும் பெற்றிமையின்=(தான் முன்கருதியவாறு நீராதலின்றிப்) பொய்யாந் தன்மைபோல—வாய்த்து=(ஞானசிரியன் கூறும் உபதேசமொழி) கிடைத்து—அதனைக்கண்டு உணர்வார் இல்வழியின்=

அவ்வசத்தின் இயல்பை ஆராய்ந்தறிவார் இல்லாவிடத்து—அசத்து இன்மைகாணும் =(அவர்க்கு) அவ்வசத்தின் கண் அறிவில்லதாய் அசத்தாந்தன்மை காணப்படுதலின்றி, அறிவுள்ளதாய்ச் சத்தாந் தன்மையே காணப்படும்.—கண்டு உணர்வார் இல்லது எனக்காண் =அவ்வுபதேச மொழி கிடைத்து அதனியல்பை ஆராய்ந்தறியவல் லார்க்கு அவ்வசத்து அறிவில்லதேயாம் என்றறிவாயாக. (எ-று.)

இதனால், நெருங்கிப்பார்க்குமுன் பாலைநிலத்தில் நீர் இருப்ப தாக மதித்த ஒருவன் அதனை நெருங்கிப்பார்த்தபின் அதில் நீர் இல்லை என்று துணிவதுபோல், குரவன் உபதேசமொழியைக் கொண்டு ஆராய்ந்தறியாதவிடத்துக் கரணம் அறிவுடையதுபோலத் தோன்றினும், உபதேசமொழி கிடைத்து ஆராய்ந்தறிந்த விடத்துக் கரணம் அறிவில்லாததேயாம் என்பது துணியப்படும் என்றவாறும்.

---

## மார்கழித் திருவாதிரை மகோற்சவ பிரபாவம்.

(இந்துசாதனப் பிரசுரம்.)

சிவாலயங்களில் நாடோறும் நடந்துவருகின்ற பூஜாகாலங்கள் சிவபெருமானது பஞ்ச கிருத்தியங்களை உணர்த்தாநிற்கும். எங் ஙனமெனின், வைகறையிற் பள்ளியறையின் திருக்காப்பு நீக்கித்தரி சனம் பெறுங்காலம் ஆகிய திருவனந்தல் என்று வழங்குகிற திருப் பள்ளியெழுச்சியானது அநுக்கிரக கிருத்தியத்தையும், அதன் பின் அபிஷேகாதியாய் நடக்கும் சாங்க பூசாகாலம் சிருஷ்டியையும், அதின் அடுத்தகாலமுதல் அர்த்தயாமத்தின் முந்தியகாலம் வரை யும் பலியிடுவதோடுநடந்துவருகின்ற பூசாகாலங்களனைத்தும்ஸ்திதி யையும், அர்த்தயாமம் சங்காரத்தையும், பள்ளியறை திரோதானத் தையும் உணர்த்தும்.

இப்படிப்போலவே, தேவதினந்தோறும் பஞ்ச கிருத்தியங் களை உணர்த்துவதாய் பூசையும் நடத்தப்படும். எவ்வாறெனில்:— தேவ தினமானது தைமாதமுதல் ஆனி மாதம் வரை ஆறுமாத மும் பகற்காலமாகவும், ஆடிமாதமுதல் மார்கழி மாதம்வரை ஆறு மாதமும் இராக்காலமாகவும் நடக்கும். இங்ஙனம் பன்னிரண்டு மாதங்கொண்ட ஒவ்வொரு தேவதினத்திலும் விடிய ஐந்து நாழி கையாகிற மார்கழி மாதத்தில்நடக்கும் உற்சவம் அநுக்கிரக கிருத் தியத்தையும், தை மாதத்தில் நடக்கும் உற்சவம் சிருஷ்டி கிருத்தி

யத்தையும், மாசி மாதமுதல் ஐப்பசி மாதம்வரை நடக்கிற மாத உற்சவங்கள் ஸ்திதி கிருத்தியத்தையும், கார்த்திகைமாதத்தில்நடக்கிற உற்சவம் சம்ஹாரகிருத்தியத்தையும் உணர்த்தும். கார்த்திகை மாதத்தின் உற்சவ பூர்த்தியாகிய திருக் கார்த்திகையின் மறுதினம் தொடங்கி மார்கழிமாதம் உற்சவத்தின் துவஜாரோகணத்திற்கு முந்தினதினம் வரையுங் கொண்ட நாட்கள் திரோதான கிருத்தியத்தை உணர்த்தும்.

அநுக்கிரகமுதலிய நான்கனுள் ஒவ்வொன்றினும் பஞ்சகிருத்தியங்கள் உளவாதல்பற்றி ஒவ்வொரு கிருத்தியத்திலும் துவஜாரோகண முதல் தீர்த்தவாரி பரியந்தமான பஞ்சகிருத்தியங்களின் பாகுபாடுகள் பெறப்படும். திரோதானம் இளைப்பாற்றுதலாதலின் ஆண்டுத் தூலபஞ்ச கிருத்தியங்களின்மையால் உற்சவங்கள் நிகழாவாம். துவஜா ரோகணம் முதலியவை பஞ்சகிருத்தியங்களாமாறு,—துவஜாரோகணம் (கொடியேற்று) சிருஷ்டியையும், பலி ஸ்திதியையும், கிருஷ்ணகந்தம் சம்ஹாரத்தையும், ரதாரோஹணம் திரோபவத்தையும், தீர்த்தவாரி அநுக்கிரகத்தையும் உணர்த்துவனவாம். அவற்றுள் துவஜாரோகணம் ஆணவாந்தகாரத்தில் அமிழ்ப்புண்டு கிடக்கும் ஆன்மகோடிகளை உய்வித்தற்பொருட்டு அதினின்றும் எடுத்தலைக்காட்டுதலால் அது சிருஷ்டியாயிற்று. பலி மலபரிபாகத்தின்பொருட்டு ஆன்மகோடிகளுக்கு அளித்தருளிய தனுவாதிகளைக் காத்தலைக்காட்டுதலால் அது ஸ்திதியாயிற்று. கிருஷ்ணகந்தம் ஆன்மகோடிகளைப்பந்தித்துநின்றபாசத்தை ஞான வீட்சணத்தில் லயிப்பித்தலைக்காட்டுதலால் அது சம்ஹாரமாயிற்று. ரதாரோகணம் துன்பமயமான உலகவியாபாரமனைத்தும் கீழ்ப்பட மேற்கொள்ளுதலைக்காட்டுதலால்திரோபவமாயிற்று. இம்முறையே தீர்த்தவாரி அநுக்கிரகமென்பது ஞானாசாரியரை வழிபட்டு அவ்வாற் பெறப்படும் அநுக்கிரக விபூதியால் பக்குவிகள் அநுபவமாய் அறியற் பாலது. கிருஷ்ணகந்தம் என்பது ஏழாவது உற்சவ தினத்தில் சபாநாயகருக்குச் சாத்தப் படுகின்ற திலகமாம். காப்பில்லாவிடத்து எத்தொழிலும் இயலாவாதலின் ஸ்திதியை உணர்த்தும் பலி ஏனைய நான்கினும் விடாது நிகழப்பெறும். நித்தியத்தோடு நைமித்தியமும் பிரதி தினத்திலு நிகழ்தற்கேலாவென்பதற்குரிய காரணங்கள் பலவுளவாகலானும் ஒவ்வொரு தினத்திலும் பூர்வ பட்சம் பொதுவாகையால் உயர்வாதல்பற்றியும் அவற்றுள் அமைய வைத்துத் தேவதின பஞ்சகிருத்தியமென்னும் உற்சவங்கள் ஏற்

பட்டு நடந்து வருகின்றன. (சிற்சில ஆலயங்களில் விசேட காரணங்களால் இம்முறை பிறழ்ந்தும் நிகழும்.) இதுகாறுங் கூறியவாற்றால் பன்னிரண்டு மாதங்களுள்ளும் மார்கழி மாதம் தேவதினத்தின் அநுக்கிரக காலமாதலால் அதில் நடக்கிற உற்சவம் மிகவும் சிறப்புடைத்தா மென்பது பெறப்படும்.

இம்மார்கழி உற்சவம் சோமவாரத்தையொப்ப நக்ஷத்திரங்களின் விசிஷ்டமாய்ச் சிவபெருமானுக்கு உரித்தாயுள்ள திருவாதிரை நக்ஷத்திரத்தைத் தீர்த்தவாரி தினமாகக்கொண்டு அதற்கு இயையத் துவஜாரோகண முதலியவை ஏற்பட்டு நடந்து வருகின்றது. ஆன்மகோடிகளை உய்விக்கும்பொருட்டு செய்தருளும் பஞ்ச கிருத்திய உபகாரப்பெருமையை அவ்வான்மகோடிகளறிந்து வழிபட்டுய்யும்பொருட்டு காருண்ணியத்தாற் சகளீகரித்து விளங்குபவரும் அருட்சத்தியாகிய சிவகாமியம்மையாரை வாமபாகத்திலே உடையவருமாகிய சபாநாயகரே இவ்வுற்சவத்துக்கு ஆதிக்கமுடையவர். சபாநாயகர் கோடிசூரியருடைய ஒளிபோலும் ஒளியும், திருப்புன் முறுவலையுடைய ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்களும், கங்கையையும், பிறையையும், கொன்றைமாலையையும் தாங்கிப் பின்றாங்குகின்ற திருச்சடையும், சங்கக்குண்டலம் பொருந்திய வலத்திருச்செவியும், திருத்தோடு பொருந்திய இடத்திருச்செவியும், திருநீலகண்டமும் டமருகம்பொருந்தியதிருக்கரம் அபயகரமென்னும் வலத்திருக்கரம் இரண்டும், அக்கினியகல்பொருந்திய திருக்கரம் டோளகரமென்னும் இடத்திருக்கரமிரண்டும், புலித்தோலை ஆடையாகக்கொண்டு கச்சை யுடைத்தாய் நெறிப்புப் பொருந்தி விளங்குந் திருவரையும், முயலகன் மேல் ஊன்றிய வலத்திருப்பாதமும், தூக்கிவளைத்த இடத்திருப்பாதமும் உடையர். சிவகாமியம்மையார், பச்சைநிறத் திருமேனியும், திருக்கழுத்திலே பொருந்திய திருமங்கலசூத்திரமும், செங்கழுநீர்மலர் பிடித்தவலத்திருக்கையும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடத்திருக்கையும், மிக ஒடுங்கிய திருநிலையு முடையவர். சபாநாயகருடைய உருவம் ஸ்ரீபஞ்சாக்ஷரவடிவம், வாச்சிய மந்திரமாகியசிவசத்தி அவருக்கு உண்மைவடிவம். வாசகமந்திரம் அவருக்குக்குக் கற்பிதவடிவம். அவருடைய ஆநந்தநிருத்தம் பஞ்சகிருத்தியம். சிருஷ்டிகிருத்தியம் டமருகத்தினும், திதி கிருத்தியம் அபயகரத்தினும், சங்காரகிருத்தியம் அக்கினியினும், திரோபவ கிருத்தியம் ஊன்றிய பாதத்தினும், அநுக்கிரக கிருத்தியம் குஞ்சிதபாதத்தினும் தோன்றும்.

ஒப்பும் உயர்வும் விருப்பும் வெறுப்பும் இல்லாத முதல்வனது கிருத்தியங்களனைத்தும் ஆன்மகோடிகளின் பொருட்டேயன்றித் தன்பொருட்டன்றாதலானும், சிருஷ்டி அவனது கர்மானுஷ்டானமும், ஸ்திதி ஆகாரமும், சம்ஹாரம்சுவஸ்திகமும், திரோபவம் நித்திரையும், அநுக்கிரகம்துயில்நீத்தலுமாம். இத்தன்மைய இறைவன் ஆன்மகோடிகளால் உபசரிக்கப்படுதலை அங்கீகரித்தற்கண் அபிஷேகம் சிருஷ்டியும், நைவேத்தியம், ஸ்திதியும், கிருஷ்ணகந்தம் சம்ஹாரமும், கபிலைதரிசனம் திரோபவமும், தீபாராதனை அநுக்கிரகமுமாம். துயில்நீங்குங்காலை திரைம்பமாகலின் ஆண்டு இலக்குமியின் வாசஸ்தானங்களிற் சிறந்த கபிலையின் பிற்பாகத்தைத்தரிசிப்போர் இலக்குமியைத் தரிசித்தவரேயாய்க் குறைபாடுகளி னீங்குமாறு செல்வராவரென்னும் முறையைப்பற்றித் திரோபவத்தினீங்கிய அவசரம் துயில் நீத்தலாதலின் ஆண்டும் இறைவற்கு அவ்வாறே உபசரிப்பர். இறைவன் இவ்வழிபாட்டின்கண் ஆன்மாக்களைப் போலாது உலகியலை நடத்திக்காட்டுவதாய் இலக்குமிதேவிக்கு அநுக்கிரகம் பண்ணுவது மாத்திரமாயிருக்குமென்பது உண்மை நூற்றுணிபு.

மெய்யன்பிற் சிறந்த சேந்தநாயனர் நாடோறும் இறைவரது பரிகலசேஷமே அமுதாகக்கொள்ளும் நியதமுடையராதலின்பண்டு ஓர் மார்கழித்திருவாதிரை நாளில் தமக்குப்பிட்டுங்களியுமே யமையப் பெறமனவருத்தத்தோடு அவற்றை இறைவர்க்குச் சமர்ப்பித்த மெய்யன்பை விளக்கவும் அவரது மனவருத்தத்தைத் தீர்க்கவும் திருவுளங்கொண்டு இறைவன் அப்பிட்டுங் களியும் சிற்சபைக் கண் தனது திருவடியின் கீழாக அடியார்யாவரும் காணும்படி செய்தருளி அநுக்கிரகித்தவண்ணமே அன்றுதொட்டு மார்கழித் திருவாதிரைதோறும் பிட்டுங்களியும் விசேட நைவேத்தியமாகக் கொண்டருளி வருகின்றது.

மார்கழித் திருவாதிரை மகோற்சவ முழுமையும் அநுக்கிரக சொரூபமாகிய முறைபற்றி அநுக்கிரகத்தைக் குறிக்குந்தீர்த்தஸ்நானம் முக்கியமாதலால் அந்நாட்களில் நித்திய பூஜாநுக்கிரக காலத்திற் கியையத் தீர்த்த ஸ்நாநத்தோடு திருவடி தரிசனம் பண்ணுவது ஆன்றோராசாரமாகலின் ஸ்ரீமந், மாணிக்கவாசகசுவாமிகள் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்குங் காலத்தில் தீர்த்தஸ்நாந தரிசனத்துக்காக அந்நகரவாசப் பெண்கள் ஒருவரையொருவர் பிரேரித்த, பாவனையாகத் திருவெம்பாவை; திருவாசகம் அருளிச்செய்தனர்.

இச்சிறப்புடைமைபற்றி எல்லா மாதங்களினும் மார்கழிமாதமும் அதனுள் திருவாதிரை உற்சவமும், அவ்வுற்சவகாலத்தில் திருவெம்பாவைப் பாராயணமும் பெரும்பயன் அளிக்கும் பிரசாதத்தைப் பெறுதற்குரிய சாதனங்களாம். அது பரம்பரையாய் ஆன்றோர் ஆசாரமாக வழங்கிவருகின்றது. ஆதலால் சிவநேசர்கள் யாவரும் அவ்வுண்மையை யுணர்ந்து வழிபட்டு எண்ணிய எண்ணியாங் கெய்தி வாழக்கடவார்களாக.

☞ இந்த மார்கழித் திருவாதிரையினன்று சிதம்பரத்திலேயுள்ள சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து சிவகாமவல்லிசமேத சபாநாயகர் செய்தருளும் திருநிருத்தத்தைத் தரிசித்தோர் இம்மையிலே வேண்டிய போகங்களையும், மறுமையிலே மோக்ஷத்தையும் பெறுவர். இச்சிதம்பரக்ஷேத்திரத்தின் மகிமைகள் சாந்தோக்கியம், தைத்ரீயம், கைவல்யம் என்னும் உபநிடதங்களில் விரிவாகவும், தரிசனோபநிஷத்தில் குறிப்பாகவும், ஸ்காந்த முதலிய மகா புராணங்களில் மிக விரிவாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம்,

வே. கநகசபாபதி ஐயர்,

உபயவேதாகம பண்டிதர், நல்லூர்.

## அர்ச்சாதீபம்.

(5-வது மலர் 8-வது பக்கத் தொடர்ச்சி.)

அன்றியும், "விஸ்வதஸ்சட்சுருத விஸ்வதோமுகோ விஸ்வதோஹஸ்த உத விஸ்வதஸ்பாத், ஸம்பாஹுப்யாம் நமிதி ஸம்பதத்ரைர்த்யாவா ப்ரதிவீ ஜனயந்தேவ யோகஃ என்னும் வாக்கியத்தில் விசுவரூபரான அவருக்கு (சக்ஷு - முகம் - ஹஸ்தம் - பாதம் - பாஹு) இத்யாதிகளுங் கேட்கப்படுகின்றன. இதனுண்மை மேல்செய்த சூரியோபாஸனை விசாரத்தாலும் விளங்கும்.

"யயேஷோந்த ராதித்யே ஹிரண்மயஃ புருஷஃ" என்னும் வாக்கியத்தில் (ஹிரண்மயம்) என்று பரனுக்குப் பொன்னிறமான திருமேனிகேட்கப்படுகின்றது. அன்றியும், அதைவற்புறுத்தற்கு "நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்ய வர்ணய ஹிரண்யரூபாய ஹிரண்ய

பதயேம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோநம:" எனவும் பிரகாசம் பண்ணப்பட்டிருக்கின்றது. (பொன்னார்மேனியன்) என்றதுமாத்திரமேயன்றி (அம்பிகாபதி, உமாபதி) என்று அவன் சிற்சத்தியுத்தனாயிருப்பதையும் இரட்டித்துக்கூறினமையால், பரனுக்கு உருவமில்லையென்று கூறுவது உருக்காட்டா தொழிந்தது. மேலுண்மையையே (பொன்னார் மேனியனே) எனவும், (பொன்வண்ணமெவ்வண்ண மவ்வண்ணமேனி பொலிந்திலங்கும்) எனவும் பூர்வாசாரியர்களுங் கூறியிருக்கின்றனர். இந்த உபநிஷத்தில் உபாஸகனது ஹ்ருத்புண்டரீகத்தை வர்ணித்து, தன்மத்தியில் "தஸ்யே ஸ்வஹிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்திதः" என்று பரமாத்வாவுக்கு இடஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. அநந்தரம், அங்குஷ்டமாத்ரः புருஷः என்று அவ்விந்தராத்மாவினது ரூபபரிமாணமுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும், அப்பரனது பஞ்சவக்திரங்களை ஸத்யோஜாத-வாமதேவ-அகோர-தத்புருஷ-ஈசானமந்திரங்களால் பிரகாசம்பண்ணியிருக்கின்றது. இத்யாதி பஹுஸ்தலங்களை யோசியாவிடின், அந்தத் தெரியாமைக்கு யார் என்னசெய்யலாம்?

இன்னும், "அணோரணீயாந் மஹதோ மஹீயாந்" என்று ஆரம்பித்த பத்தாவது அநுவாகத்தில், மஹிமாநமீசம் என்று பிரஹ்மத்தை ஈசஸப்தத்தால் விளக்கி அது முடிந்தவிடத்தில் யः பரஸ்ஸ மஹேஸ்வரः என்று விசிதப்படுத்தியிருக்கின்றது. இதனால், ஈஸ மஹேஸ ஸப்தங்களால் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருள் அணுவாகவும், மஹத்தாவும ரூபபரிமாணங்களைக்கொண்டு விளங்குந்தன்மை பிரஸித்தமாயிற்று. இவ்வுண்மையையே (அருமறையினகத்தானை யணுவை) எனவும், (கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற-பெரியானை) எனவும் போந்த திராவிடஸூக்தியில் (அணுவை = பெரியானை) என்னும் பிரயோகங்கள் வெளியாக்கின. அன்றியும், (அண்டங்களெல்லா மணுவாக வணுக்களெல்லா - மண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினும்) என்ற மேலோரநுபவவுரையுஞ் சான்றும். இதனால், பரனுக்குச் சிறியவுருவும், பெரியவுருவும் பிரசித்தமாயின.

பஞ்சபிரஹ்மோபநிஷத்தில் "அகாராதிஸ்வராத்யக்ஷ மாகாசமய விக்ரஹம்." என்று பிரஹ்மங் கேட்கப்படுகின்றமையால், ஆகாசமயமான தேகமுள்ளது அதுவென்று நிச்சயிக்கப்படுகின்றது. இதனால், பரனை விக்கிரமாக அறிவது கூடாது என்பவர்மதம் அவைதிகமாயிற்று.

அன்றியும், பிரஹ்மவல்லியில்" தஸ்யயஜுரேவசிர: ருக்தக்ஷிண:
பக்ஷ: ஸாமோத்தர: பக்ஷ:, அதர்வாம்கிரஸ: புச்சம் ப்ரதிஷ்டா.
என்று கூறினமையால், வேதங்கள் சிவனுடைய அவயவங்களென
வும், அவை சிரஸ்ஸு முதலாயினவெனவும் ஏற்படுகின்றது. சிர
ஸ்ஸு - பக்கங்கள்-புச்சம் இவைகளைக்கொண்ட தொருபொருளை
அங்கவிஹீனமானது என்று எங்ஙனங்கூறலாம்? அன்றியும், சுருதி
யில் "ருத்ரயத்தே தக்ஷிணமுகம் தேநமாம்பாஹி நித்யம்" என்று
கூறப்பட்டமையால், பிரஹ்மத்துக்குத் தக்ஷிணமுகங் கேட்கப்படு
கின்றது, தெற்குமுகம் என்று வியவஸ்தையுண்டாயினபிறகு அத
ற்கு உருவமில்லையென்று சொல்ல யாவரால் முடியும்? இதுகாறும்
எடுத்துக்காட்டிய பிரமாணங்களால் பிரஹ்மத்துக்கு உமாஸஹாய
த்வமுதலிய ரூபங்களும், விசுவரூபம்-ஹிரண்மயரூபம்-அங்குஷ்ட
ரூபம்-அணுரூபம்-விபுரூபம்-ஆகாசமயரூபம்-அரூபம் இத்யாதிகள்
வெளியாயினமையால், இத்தகைய எல்லாவடிவங்களும் அப்பரனது
ஸ்திரமான அருள்வடிவங்களென்று அறியவேண்டியது. இதற்கு
"ஸ்திரேபிரம்கை: புருரூப உக்ர:" என்னுஞ்சுருதியே சான்றும் உக்
கிரநாமத்தையுடைய சிவன் ஸ்திரமான அவயவங்களும், அநேக
மான ரூபங்களுங் கொண்டிருக்கின்றாரென்று வெளிப்பட்ட சுருத்
யர்த்தத்தை யுணர்ந்தபேர்களுக்கு வீண் ஸந்தேஹவிபரீதங்களுண்
டாகமாட்டா. நஸ்வரமில்லாத அவயவங்களும், எண்ணிறந்த திரு
மேனிகளும் உடையது பிரமம் என்று சுருதிகள் கோஷிக்கின்றமை
யால், பரனுக்கு உருவமில்லை, அருவமேயுளது என்று சாதிப்பா
ருரை சழக்குரையாக முடிந்தது.

இனி, அந்தப்பரனை அர்ச்சாபிம்பங்களில் ஆராதிப்பதற்கு
வேதத்தில் ஆதரவு கிடையாது என்று பிணங்கிக்கூறும் பெரும்பித்
தையும் பெயர்த்தெறிவாம்.

"தவஸ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ரயத்தேஜ நிமசாருசித்ரம்
பதம்யத் விஷ்ணோருப மந்யதாயதே நபாவிகுஹ்யம்: நாமகோ
நா:"என்னும் ருக்ஸஹ்மிதா வாக்கியத்தால் ஸமஸ்த தேவர்களும்
சிவலிங்காராதனத்தால் தங்கள் ஐசுவரியங்களை அடைந்தார்களென
வும், லட்சுமீஸமேதராகிய விஷ்ணுவானவர் சிவலிங்கபூசைசெய்து
பரமபதத்தை அடைந்தார் எனவும் பெறப்படுகின்றது. இதனுண்
மையை விளக்கும் உபப்பிரஹ்மணமாகிய பிரஹ்மகைவர்த்தத்தில்
"ரௌத்திரம் ஸமப்யச்ய ஹிலிங்கமாதௌ, சிலாமய காருஹரிம்
பத்யா, சுதுர்லபம் வைஷ்ணவ மாத்யமக்ர்ய, மவாப்தவாநேஷு

பரம்பதம்தத்'' என்னும் வசனத்தால் இந்தவிஷ்ணுவானவர் ஆதியில் சுந்தரமாகவும், சிலாமயமாகவுமிருக்கின்ற சிவலிங்கத்தைப்பூசித்து ஸர்வோத்கர்ஷமாகிய பரமபதத்தை அடைந்தாரென்று வெளிப்படுகின்றது. மூலமும், அர்த்தமுமாகவெளிப்பட்ட வேதவாக்கியமும், புராணவசனமும்ஸப்பிரமாணமாயின. இவற்றால் சிவலிங்கார்ச்சனை பசுமரத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது. தேவர்கள் சிவபூசைசெய்தார்கள், விஷ்ணு சிவபூசைசெய்தார் என்று வேதத்திற்றானே முழங்கப்படுகின்றமையால், அர்ச்சைக்கு வேதத்தில் ஆதரவுகிடையாது என்பவர் துணிவு துணிக்கப்பட்டது.

பைப்பலாதசுருதியில், "யோவாமபாதார்சித விஷ்ணுநேத்ர..." என்னும் வசனத்தால் விஷ்ணுவால்சிவார்ச்சனை செய்யப்பட்டதாக ஏற்படுகின்றது. இந்தச் சுருதியாலும் அர்ச்சாராதனம் விசிட்டபுருடராகிய விஷ்ணுவினிடங்கேட்கப்படுகின்றது. விஷ்ணுவுக்கே அது கௌரவ யோக்கியமாகுமெனின், ஏனைப்பசுக்களுக்குக் கௌரவத்தைபுண்டுபண்ணுமென்பதைச் சொல்லவும்வேண்டுமோ? இதனால் சிவார்ச்சனையில்லாதவர் கௌரவஹீனரென்பது தானேபோதரும்.

பஸ்மஜாபாலத்தில் "லிங்கரூபிணம் மாம்ஸம்பூஜ்ய சிந்தயந்தி..." என்னும் வசனங்களால் இலிங்கவடிவமாகிய என்னை நன்குபூசித்து யோகிகளுஞ் சித்தர்களுஞ்சிந்திக்கின்றார்கள். சித்தியை அடைகின்றார்கள். தீக்ஷிதர்களும் என்னையே யஜனஞ்செய்கின்றார்கள். ஸாங்கங்களான வேதங்களும், ஸர்வோபநிஷத்துக்களும், இதிஹாஸத்துடன் என்னையே துதிக்கின்றன. என்னைத்தவிர வேறொரு பதார்த்தமுமில்லை. நானே சகலமுமாயிருக்கின்றேன். என்னிடத்திலே தானேசகலமுமிருக்கின்றன. அதனால், காசியில்மரணவிச்சையுடையவரால் இரவும் பகலும் நானே பூசிக்கவுரியவனாகின்றேன். அவ்விடத்தில் பயங்கரமான முகங்களுள்ள கணங்கள் நாநாவிதமான நகங்களுள்ளனவும், நாநாவிதமான சஸ்திரங்களைத் தாங்கினவும்' நாநாவிதமான ரூபங்களைத் தரித்தனவும், நாநாவிதமான அடையாளங்களைப் பெற்றனவுமாக இருக்கின்றன, அந்தக்கணங்கள் யாவும் விபூதிதாரணஞ் செய்துகொண்டிருப்பனவும், ருத்ராக்ஷமாலிகாபரணம் பூண்டனவும், அஞ்சலி கூப்பினவுமாகிய நித்தியம் அபித்தியானஞ் செய்துகொண்டிருக்கின்றன. அவ்விடத்தில் பூர்வதிக்கில் பிரஹமாவானவர் அஞ்சலிசெய்துகொண்டு இரவும்பகலும் என்னையே

உபாசித்துக்கொண்டிருக்கின்றார். தென்றிசையில் விஷ்ணுவானவர் சிரசில் அஞ்சலிகூப்பினவராகி உபாசித்துக்கொண் டிருக்கின்றார். மேற்குத்திக்கில் இந்திரன் வணக்கத்துடன் உபாசித்துக்கொண் டிருக்கின்றான். வடதிசையில் அக்னிவடிவத்தையுடைய உருத்திரர் என்னை உபாசித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று சிவபெருமான் அருளிச்செய்த வுண்மை வெளியாயிற்று. இந்த வுபநிஷத் பிரமாணத்தால் சிவலிங்கோபாஸனையும், காசிக்ஷேத்திர வைபவமும், அங்கே உபாசித்துக்கொண்டிருக்கும் உபாஸகர் இவரென்பதும், அவர்கள் யோக்கியதையும், அங்கு உபாஸ்யராயுள்ளவர் சிவனென்பதும் வியக்தமாயின. அர்ச்சாபிம்பம் வைதிகமோ? அவைதிகமோ? இனியேனுங் கூர்ந்து யோசிக்கட்டும். அர்ச்சையை மாத்திரமேயன்றி அது பிரதிஷ்டிக்கப்படும் இடத்தையுங்கூட வேதஞ்சொன்னமையால், அர்ச்சையையும், திவ்ய க்ஷேத்திரங்களையும் நிந்திப்பவர்கள் வேதபாஹ்யரென்னத்தட்டில்லை.

பஸ்மஜாபாலத்தில், "அஹரஹரப்யர்ச்ய விஸ்வேஸ்வரலிங்கம்..." என்னும் வசனத்தால் பிரதிதினமும் விசுவேசுவரலிங்கத்தைப் பூசித்து, அதில் ஸ்ரீருத்ரஸூக்தங்களால் அபிஷேகஞ்செய்து அந்த அபிஷேக ஜலத்தை மூன்றுதரம் பானஞ்செய்தவன் மஹாபாதகங்களினின்றும் விடுபடுகின்றான். அவன் சோகத்தை அடையமாட்டான். அன்றியும், ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுகின்றான். யாரும் அந்த இலிங்கத்தைப் பூசியாமல்புஜிக்கக்கூடாது. சிவநிவேதமன்றியில் அவைகளை ஒருவன் புஜிப்பானாகில், அவன் ரேதஸ்ஸையே புஜித்தவனாகின்றான் என்று வெளியாகின்றது. இதில், சிவலிங்கார்ச்சனையும், அர்ச்சிக்கவேண்டிய விதியும், சிவநின்மாலிய ஸ்வீகாரமும், இவைகளைக் கொள்ளாதபோது பிரத்யவாயமுஞ் சொல்லியிருக்கின்றது. அன்றியும், முன்சுருதியிற் கூறியபடிக் காசிக்ஷேத்திரமும், அங்குள்ளஸ்வாமிதிருநாமமும் வியக்தம். இவ்வளவு பிரஸித்தியை வேதமூலகத்தால் அடைந்திருக்கின்ற அர்ச்சாமார்க்கத்தை எங்ஙனே கைவிடுவது? இதனால், கைவிடுவது கீழ்மக்களுக்கே சிறக்கும்.

(இன்னும் வரும்.)

# திருமுறைப்பெருமை.

## திருமுறையிற் சிவபிரான் கழிபெருங்காதல் உடையரெனல்.

காமுகனாயினான் தன்வாய்ச் சொல்லினும் தன்னால் விரும்பப்பட்ட காமக்கிழத்தியர் வாய்ச்சொல்லிலே மிகவும் பற்றுடையனாய் மகிழ்ச்சியடைவன். அதுபோலச் சிவபிரானுந் தமது வாய்ச்சொல்லாகிய வேதாகமங்களினும் தம்மால் விரும்பப்பட்ட அடியவர் வாய்ச்சொல் * லாகிய தேவார முதலிய திருமுறைகளிலே மிகவும் பற்றுடையராய் மகிழ்ச்சியடைவர். அது, "ஒழித்திடும்பவப்பகை விரைந் துள்ளமே யோதுமூ துணர்வோர்முற் - பழிச்சு பாடலை † யரற்கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலுங் - கழித்தி டேனுப சாரமென்றிதனை நீ கட்டுரை யெனக்கொள்வாய் - விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப்பினர் விருப்பிதே." என்னும் வைராக்கிய சதகச்செய்யுளாற் பெறப்படும்.

இன்னுமிதனை, "தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட் செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக - மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பியசொன் முற்றுமோதான்." என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கும் வலியுறுத்துமென்க. அஃதன்றி, "பண்டையோர் நம்மைப் பரவு சொற்பாடல் கொண்டுநீ துதிகள்கூறெனவிளம்பி" ‡ என்னுஞ் சுப்பிரமணியக் கடவுள் திருவுளக்கிடக்கையு மதுவாமாறு கண்டுகொள்க.

## திருமுறைகள் திருவருளைக் கொடுக்குமெனல்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அனுக்கிரகம்பெற்ற நம்பியாண்டார் நம்பி ஆன்மாக்கள் சிவபெருமானுடைய திருவரு

---

* அடியவர்வாய்ச் சொல் என்பது முன்னும்பின்னும் பதிவாக்கியம் என்று கூறியிருத்தற்கு முரணாமை, சிவபிரான் அவர் வாக்கிற்கலந்திருத்தன் முதலிய எதுக்களானுணர்க. † 'ஒழித்திடும் பவப்பகை விரைந் துள்ளமே யோது மூதுணர்வோர் முற்பழிச்சுபாடலை' என விசேடித்து வற்புறுத்திக் கூறினமையால் தேவாரமுதலிய திருப்பாட்டுகள் அவற்றை யருளிச் செய்தவர்களுக்கும் பிறர்க்குந் தப்பாது பெரும்பயன் றருவன வென்பது பெற்றாம். ‡ 'பண்டையோர் நம்மைப் பரவுசொற்பாடல் கொண்டுநீ துதிகள் கூறெனவிளம்பி' என்றதனானும், 'ஒழித்திடும்பவப் பகை' என்னுங் குறிப்புக் கருத்து நன்குவிளக்கப்பட்டது.

ளைப் பெறுதற்காகவே திருமுறைப்பெருமையை இராஜராஜ அபய குலசேகர சோழமகாராஜாவுக்குச்சொல்லி யருளினார். அதனை, "கொண்டுகுல சேகரனுங் கோன்பால்வந்து குஞ்சரத்தோ னருள் செய்த கொள்கையெல்லா - மண்டுபெருங் காதலுடன் சொல்லி அந்த வண்டமிழின் பெருமைதனை வகுத்துச்சொல்வார் - கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல் கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூற-லெண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற்காக விம்மொழியின் பெருமையையா னியம்பக்கேணீ. சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமுந் தேவர்புகழ் திருத்தோணிச்சிவனார்பங்கிற்-பீடுடைய வுமை முலைப்பா லருளாலுண்டு பிஞ்ஞகனைச் சினவிடைமேற் பெருகக் கண்டு - தோடுடைய செவியன்முதற் கல்லூரென்னுந் தொடை முடிவாப் பரசமயத்தொகைகண்மாளப்-பாடினார் பதிகங்கள் பாவி லொன்றும் பதினாறாயிரமுளதாப் பகருமன்றே. திருநாவுக் கரைய ரெனுஞ் செம்மையாளர் தீயமணர் சிறைநீங்க வதிகைமேவுங்-குரு நாமப் பரஞ்சுடரைப் பரவிச்சூலை கொடுங்கூற்றாயினவென்ன வெடுத்துக் கோதி-லொருமாலைத் தரிக்குமொரு வரையுங்காறு மொரு நாற்பத் தொன்பதினாயிரமதாகப் - பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப் பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்றுளாரே. பின்புசில நாளின்க ணாரூர்நம்பி பிறங்குதிரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தாவென்னு மின்பமுதற் றிருப்பதிக மூழிதோறு மீராறுப் பத்தெண்ணா யிரமதாக-முன்புபுகன் றவர்நொடித்தான் மலையிற் சேர்ந்தார் முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர்தன்னி-லன்றவர்கை யிலச்சினையால் வைத்தார்மன்ன வாராய்ந்து தருகவென வருளிச்செய்தார். அருமறையைச் சிச்சிலிபண்டருந்தத்தேடு மதுபோலன் றிதுவென்றுமுளதா முண்மைப்-பரபதமுந தற்பரமும் பரனேயன்றிப் பலரில்லையென்றெழுதும் பனுவல்பாரி-னெரியினிடை வேவாசாற்றெதிரேயோடு மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ்சாற்றுங் - கரியைவளைவிக்குங்கன் மிதக்கப்பண்ணுங் கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே. என்றென்று நம்பிக்குப் பரிவாலுண்மை யின்றமிழின் பெருமைதனை யியம்பக்கேட்டுக் - குன்றொன்று பேருருவங் கொண்டாற்போலுங் குஞ்சரத்தோ னருளினையுட்கொண்டு மன்னன் - மன்றினிடஞ் சென்று மறையோர்க டொண்டர் வார்சடையோர் காவலுடைமரபோர்க் கெல்லா - நன்றெங்கள் கணபதிதன் சொல்லிதென்று நன்மையுடன் மன்னவனார் நவிலுங்காலை." என்னுந் திருமுறைகண்டபுராணத் திருவிருத்தங்களானுணர்க.

## திருமுறை முத்தி கொடுக்குமெனல்.

சிவகரணமுடையோர் திருவாய் மலர்ந்தருளிய தேவார முதலிய திருமுறைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப் பிணிதீர்த்து மோட்சத்தைக்கொடுக்க வல்லுன. அதனை, "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்-துறவியெனுந் தொஃறோணி கண்டீர்-நிறையுலகிற்-பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்-றன்மாலை ஞானத் தமிழ்" என்னும் நம்பியாண்டார்நம்பி திருவாக்கானும், "காழிமாநகர்க் கவுணியர் குலத்தொருகாளை-யேழிசைத்தமிழ் ஞானசம் பந்தனெம் மடியான்-யாழநீபெற வெம்முரு விங்குவந் தளிப்பா-னாழி யோயதுகாறுமிவ் வரைப்பினி லமர்ந்து." "ஈட்டருந்தவ மியற்றுகென் றருளிநீங் குதலுங்-கோட்ட மின்றிமா லம்முறை வதிந்துபூங் கொன்றைத்-தோட்ட லங்கலாற் றொழப்புகு முத்தமிழ் விரகர்-பாட்ட லங்கலாற் பரஞ் சுடர்த் திருவுருப் பெற்றான்." என்னுங் காஞ்சிப்புராணச் செய்யுட்களானும், "கேவல ஞானக் கிழவனுளுடைப்-பிள்ளைநா வரசு பேராரூர-னாதன வாக்கிய னருந்தமிழ் மூலன்-சீவன் முத்தர் திருவாய் மலர்ந்த-நூல்பவ நோய்க்கு நண்ணிய மருந்தே." என்னுஞ் சத்திய ஞானபோத ஆசிரியப்பாவானும், "வீட்டிற்கு வாயிலெனுந்தொடை சாத்து சொல் வேந்தபொது-வாட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி-நாட்டிற்கிலாத சுடர்நோய் நினக்குமுன் நல்கினுமென்-பாட்டிற்குநீயு மவனுமொப் பீரெப் படியினுமே." என்னுஞ் சிவப்பிரகாச சுவாமிக டிருவாக்கானும், விரிவஞ்சிவிடுக்கப்பட்ட தேவாரத்திருக்கடைக்காப்புகள் பலவற்றானுமுணர்க.

## திருமுறைகட்கு ஒப்புயர்வு கூறன் முதலியன உய்தியில்லதோர் குற்றமாமெனல்.

தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளுக்கும் ஒப்பாகவேனும் உயர்வாகவேனும் ஒரு நூல் உண்டெனக் கூறிக்கொண்டாடுவோரும், அவற்றை நிந்திப்போரும், நிந்திக்க நினைப்போரும் எரிவாய் நிரயத்து வீழ்ந்து வருந்துவர். அதனை, "ஒப்பிலி யநாதிமுத்தனோதிய வேத * மாதிக்-கொப்புயர் வுரைப்போர் நிந்தை யுரைப்பவ

---

* வேதம் என்பது ஆரியவேதத்தையும் திராவிட வேதத்தையும் உணர்த்துமென்பது "திராவிடவேதம் பூர்வீகமே" எனப் பின்வரும் விஷயத்தால் நன்கு தெளிக. ஆதிசத்தத்தால் திருமுறைகளைத் தழுவுவாருமுளர்; அவர் தமிழ் வேதம் பூர்வீக முள்ளதென்பதை உணரார் போலும்.

ருன்னு வாரும்-வெப்பெரி நிரயம் வீழ்ந்துவெந்துருகி வீயா-ரெப் பொழு தேறு வாமென் றிளைத்திளைத் தேங்கு வாரே." என்று சுப்பிரமணியப்பெருமான் அகத்தியமகாமுனிவருக்கு அறிவுறுத் திய பொருளையுடைய சிவதருமோத்தரச் செய்யுளானுணர்க.

இக்கருத்துப்பற்றியே திருக்கைலாச பரம்பரைத் திருவாவடு துறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிகமூர்த்திகளும் தாமரு ளிச்செய்த இலக்கணக்கொத்துப்பாயிரத்திலே ஏழாஞ்சூத்திரவுரை யில், "திருவைக்கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம்: அன்றியும், அழகிய திருச்சிற்றம்பல முடையார் அவர்வாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக்கையா லெழுதினர். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை முத லியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றுக்குவர். அங்ஙன முமமையாது, இலக்கணமாவது தொல்காப்பியமொன்றுமேசெய்யு ளாவது திருவள்ளுவரொன்றுமே இவ்விரண்டுநீங்கலான இலக்கண விலக்கியமெல்லாம் ஒன்றற்கொன்று பெருமை சிறுமை இணையென் றுகொள்வாரென்பது தோன்ற இம்முறைவைத்து அடையைப் பொதுவாக்கினும். அவர் அதுமட்டோ இறையனாரகப்பொருண் முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவி சைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார்பா டல் முதலிய இலக்கியங்களையும், ஓர்பொருளாகவெண்ணாது, நன் னூல், சின்னூல் அகப்பொருள், காரிகை, அலங்கார முதலிய இலக் கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன்கதை முதலிய இலக்கியங்களையும் ஓர்பொருளாகவெண்ணி, வாணாள் வீணாள் கழிப் பர். அவரிவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல்போல அவரதியற்கையென்க." என்று கூறியதூஉமென்க.

# ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

இஃது

ஸ்ரீமான். மா. தி. பாநுகவி சுவாமிகளால்

எழுதப்பட்டது.

"முன்னோர்கால் பிருகுமுனிவர் விஷ்ணுவைச் சபித்தமையால், அவர் மனம்நொந்து பூமியிலே அநேக அவதாரஞ்செய்தாரென்று உபமன்னியமுனிவன் சொல்லத்தொடங்கும்போது, முனிவர்கள் அரி பிருகுசாபம் அடைந்தபின்னர், மந்தரமலையை அடைந்தாரென்று கேள்வியுற்றோம்; அதனையும் எங்களுக்குக் கூறியருளல் வேண்டும் என்று கேட்ப, உபமன்னியு இவ்வாறு கூறுகின்றார். பிருகுமுனிவர் சபித்தபோது திருமால் நடுநடுங்கி உருத்திரரும், மகேசுவரரும், கணங்கள் புடைசூழப்பெற்றவரும், புகல் அடைந்தோரைக் காப்பவருமாகிய அம்பிகாசமேத வரனைத் தமது இருதயகமலத்திலே சிந்தித்து, கருடமீதிவர்ந்து தேவர்கள் வாசஞ் செய்வதாயும் மனோகரமான குகைகளையுடையதும், கின்னரர்கள் உறையும் வனங்களை யுடையதும், ஒலிக்கின்ற பற்பல கணங்களுக்கு உறையுளாகிய உத்தியானங்களை யுடையதும், சப்திக்கின்ற பற்பல பறவைகளையுடையதும், பலவகை விருக்ஷம் கொடி செடி என்பவற்றை அளாவிய பரிமள வாயுவையுடையதும், மனதிற்கு இனிமையும் இன்பமும் விளைப்பனவாகிய பாரிசாதங்களையுடையதும், பற்பல அரதனக்குவியல்களையுடையதும், சுவர்ணப்பிரகாச தோரணங்களையுடையதும், ஸ்ரீகைலாசம்போல இலங்கும் அநேகாயிர பிரசாதங்களையுடையதுமாகிய மந்தரமலையை யடைந்து, அங்கே சுவர்ணக் குகையொன்றிலே சடையுடையராயும், முண்டிதராயும், மேகலையுடையராயும், பஸ்மதிஷ்டராயும் அமர்ந்து அக்கினியை ஓம்பி, தினந்தோறும் திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து, கிருச்சிரசாந்திராயண விரதாதிகளை அநுஷ்டித்துத் தேகத்தை வாட்டியும், ஆயிரம் தேவவருஷம் வாயுபக்ஷணஞ் செய்துந் தவம் இயற்றுவாராயினர்.

இவ்வாறு இருக்குங்கால், சிவபிரானரது வாயிற்காவலாளரும், கபிமுகத்துக்குச் சமானமாகிய பிரகாசத்தை யுடையவரும்,

அயோகிசரும், தபசிலே சித்தியுடையரும், சாலங்காயன கோத்திரருமாகிய நந்தியெம்பெருமான் கொடுந்தபசு செய்பவராகிய விஷ்ணுவைப்பார்த்து வந்து, சிவபிரானுரை நமஸ்கரித்து, "சுவாமீ, உமது ஸ்தானத்திலே விஷ்ணுவானவர் நான் என்செய்வேன்! என்று மனசிலே மெலிவுகொண்டு எப்பொழுதும் கவற்சியோடு அநேககோடி வருஷங்களாக உக்கிரமாகிய தபசு செய்துக்கொண்டிருக்கின்றார்" என்று விஞ்ஞாபனஞ் செய்தார். இதனைச்சிவபெருமான் கேட்டு முகமலர்ச்சிகொண்டு உமாசமேதராய், இடபாரூடராய், பிரமதகணங்கள் புடைசூழப் பெற்றோராய், பிரமாதி தேவர்கள் துதிப்ப, தேவர்களெல்லாம் வணங்க, விஷ்ணு தபசு செய்யும் ஸ்தானத்துக்கு எழுந்தருளி, அவ்விஷ்ணுவை நோக்கி, "குழந்தையே, உனது தபசுகண்டு பிரீதிகொண்டு உனக்கு வரங்கொடுக்குமாறு வந்தேம், எமது பக்தருக்குத் துரோகஞ் செய்தவை சந்தேகமில்லாது எமக்குச் செய்ததுபோலாயிற்று. இப்போது நீ செய்த தபசினலே எமக்குச்செய்த துரோகம் நீங்கிப்போயிற்று எமது அன்பராகிய பிருகுவுக்குச் செய்த துரோகம் இருந்தபடியே இருப்பதாயிற்று, நீ தபஞ்செய்து அத்துரோகத்தை நீக்குதற்குறிய ஸ்தலத்தை இப்போது சொல்கின்றேம் கேள்: பூலோகத்திலே காவேரிக்கு வடகரையிலே கஞ்சாபுரம் எனப் பெயரிய பரமபாவனமாகிய க்ஷேத்திரம் ஒன்றுளது. நீ அங்கேயுள்ள கஞ்சாபுரீசுரரை உத்தேசித்து நெடுங்காலந் தபசுசெய்வாயேல், உன் சாபம் நீங்கிவிடும் என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர்.

விஷ்ணுவானவர் உடனே சிவபிரானை வணங்கிக்கொண்டு கஞ்சாபுரத்தை மகிழ்வினேடு அடைந்து அப்பிருகுமுனிவரிட்ட சாபம் நிவாரணமாகும்பொருட்டு, திரிகாலமும் கஞ்சாபுரீசுரரைப் பூசைசெய்து, பஞ்சயஞ்ஞங்களையுஞ் செய்துகொண்டிருந்தார். (அதுவன்றி) திரிகாலமும் ஸ்நானஞ்செய்து வற்கலையை உடுத்தவராயும், சடாதரராயும், விபூதியை உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவுந் தரித்தவராயும், ருத்திராக்ஷமாலை அணிந்தவராயும், பஞ்சாக்ஷரசெபஞ் செய்பவராயும், கந்தமூலபலங்களையும், ஜீர்ணபர்ணத்தையும், சாகைகளையும், சலத்தையும், வாயுமுதலியவற்றையும் பக்ஷணஞ் செய்பவராயும், ஜிதேந்திரியராயும், போசனஞ் செய்யாதவராயும், சூரியனைப்பார்த்த பார்வையுடையராய்க் கிரீஷ்மகாலத்திலே பஞ்சாக்கினி மத்தியிலே நிற்பவராயும், மழைக்காலத்திலே வெளியிலே நிற்பவராயும், ஏமந்தகாலத்திலே காவேரிநதியிலே கழுத்

தளவினதாகிய சலத்திலே நிற்பவராயுங்கொண்டு, கைகள் இரண்டையும் நிராலம்பமாக உயர்த்தி, உச்சுவாசமின்றிக் கஞ்சாபுரீசுவரருடைய திருவருளைப் பெறுமாறு மகா தபசு செய்வாராயினர். இவ்வாறு அவர் உக்கிரதபசு செய்யுங்கால் நெடுங்காலஞ் சென்று போய்விட்டது. அவருடைய பிரமரந்திரத்தினின்றும் உண்டாகிய அக்கினியானது மூன்று லோகத்தையுந் தகிக்கத் தொடங்கிவிட்டது. தொடங்கவே, மூவுலகத்துமுள்ள தேவர் அசுரர் மனிதராயினோரெல்லாம் அவ்வக்கினிச் சுவாலையினாலே வருந்திக் கவலையுற்றார். அப்போது தேவர்களெல்லாம் ஒருங்குகூடி பிரமனை அடைந்து பூசித்துத் துதித்து வணங்கித் தங்கள் விருத்தாந்தத்தை விண்ணப்பித்தார்கள். அப்போது பிரமன் தேவர்களை அழைத்துக்கொண்டு ஸ்ரீகைலாசத்தை அடைந்து, சிவபிரானைப் பன்முறையும் நமஸ்கரித்து, விஷ்ணுவுடைய தபாக்கினிச் சுவாலையினாலே உலகம் அனைத்தும் வருந்துகின்றது. "சுவாமீ, எங்களை ரக்ஷிக்க" என்று வேண்டினான். அதனைக்கேட்டுக்கொண்டு அக்கினி துல்லியராகிய சிவபிரான் இடபாரூடராய்ப் பிரமாதி தேவர்கள் சூழ்ந்து செல்ல விஷ்ணுதவஞ்செய்யுந் தானத்தை அடைந்து "விஷ்ணுவே! எழுந்திரு, உன் தபசினாலே பிரீதிகொண்டேம், உனக்கு வேண்டியவரததைக் கேள்" என்று கெம்பீரமாகிய திருவாக்கினாலே உரைத்தருளினர். அதுகேட்டு விஷ்ணு எழுந்து நின்று, சிவபிரானை நமஸ்கரித்து, சிரேஷ்டப் பிரமாணமாயுள்ள சுருதிகளை மூலமாயுடைய வாக்கியங்களினாலே ஸ்தோத்திரஞ் செய்து, உரோமாஞ்சங் கொண்டு, ஆனந்தக்கண்ணீர் வார, வாக்குத் தழுதழுப்ப, பூமியிலே விழுந்து "சுவாமீ, யான் இந்திரனுடைய சொல்லுக்கிசைந்து பிருகுமுனிவருடைய பத்தினியாரை வதைத்துவிட்டேன். அப்பத்தினியார் வதைசெய்யப்பட்டமையை உணர்ந்து பிருகுமுனிவரானவர் கோபங்கொண்டு மற்ச, வராக, கூர்ம முதலிய அநேக கீழ்யோனிகளிலே நான்போய்ப் பிறக்குமாறும், அநேக ஜென்மங்களிலே ஸ்திரீவியோகம் எய்துமாறும் என்னைச் சபித்துவிட்டார். சுவாமீ, அந்தப்பிருகுமுனிவரிட்ட சாபத்தினாலே மிகவும் கஷ்டம் அடைந்துவிட்டேன். இதுவன்றி, பிரபுவே, என்னை உபாசிக்கும் ஏகதண்டியுந் திரிதண்டியுமாம் இரு சன்னியாசிகளைத் தரிசித்தவர்களையும் பாஷண்டிகளாய்ப் போமாறு சபித்துவிட்டார் அந்தச்சந்நியாசிகளுக்குச் சயனம் ஆசனம் வஸ்திரமுதலிய உதவி

ஆதரிக்கின்றவர்களையும் மகா ரௌரவாதி நரகங்களிலே போமாறு சபித்தார். பஞ்சபூதங்கள் அழியுங்காலவரையும் நான் பத்துவகைப் படும் கொடிய நரகவேதனை அடையுமாறு கோபாவேசத்தோடு அதட்டிச் சபித்துவிட்டார். ஆதலால் யான் வேறுகதி ஒன்றும் காணேன். உமது பாதார விந்தங்களையே சரணென்று அடைந் தேன். இன்று என்னை இந்தத் துன்பசாகரத்தினின்று கரை யேற்றி யருளல்வேண்டும்" என்று விஞ்ஞாபிக்கும்போது, சிவபி ரான் அவரை அணைத்து மீட்டும் மீட்டும் உச்சிமோந்து அஞ்சற்க! அஞ்சற்க!! எனது பத்தனுடைய சாபத்தைக் கடத்தல் யாவர்க் கும் அரிது எம்மாலும் மாற்றுதல் அரிது, அங்ஙனமாயினும், எமது அருளினால் உனக்கு அநேக சென்மம் எய்தாதொழிக. மற் சம், கூர்மம், வராகம், நரசிங்கம், தன்வந்திரி, மோகினி, நாரதர், பிருது, சனற்குமாரர், விராட்டு என்னும் இப்பத்து அவதாரமும் உனக்கு ஆவிர்ப்பாவமாகுக. பார்க்கவர், ராமர், பரசுராமர், கிருஷ் ணர், வியாசர், பலபத்திரர், கபிலர், நரநாராயணர், யஞ்ஞர், வாம னர், தத்தாத்திரேயர், விருஷபர், புத்தர், கற்கி, சுதர்சனர் என் னும் இப்பதினைந்து அவதாரமும் உனக்கு யோனிசமாகுக. அம் முனிவரிட்ட சாபம் உனக்குத் தடையின்றி நிகழும் என்று கூறிப் பின்னரும் சொல்லுகிறார். எமது ஆச்சிரமத்துள்ள சாதுக்களை வெறுப்பவர்கள் கோரராவர். எமது பத்தர்களைப் பாதுகாப்பவர் கள் உனக்கும் நிஷ்களங்கமாக அன்பர்களாவார்கள். அப்படிப் பட்டவர்களுடனே பேசுந் தோஷமும் மனிதருக்குக் கொடிய பாபத்தை விளைப்பதாகும். சிவாகமங்களையுணர்ந்த பிரமசாரி, கிரு கஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் நான்கு ஆச்சிரமத் தாரையும், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரையும் துவேஷிக்கின்றவர்கள் நிச்சயமாகவே பாஷண் டராவார்கள். அப்படிப் பட்டவர்கள் பொருட்டுக் கொடுக்கும் கொடையும், செய்யும் ஓமமும், செபமும், தியானமும், ஸ்நானமும் பூசையுமாகிய வெல்லாம் சாம்பலிலே இட்ட ஆகுதிபோலே நிஷ் பலமாய்ப்போம். எமது ஆச்சிரமத்துள்ளவர்களை நிந்திப்பவர் எம்மையே நிந்திப்பவராகின்றார். நம்முடைய ஆச்சிரமத்துள்ளவர் களைத் தோத்திரஞ் செய்பவர் நம்மையே தோத்திரஞ் செய்பவ ராவார்கள் என்றார்.

(இன்னும் வரும்.)

## அறிவிப்பு.

சந்தாதாரர்கள் பலர் கடிதங்கள் எழுதும்போது தங்கள் சந்தாலக்கத்தை யெழுதுகிறதில்லை. சிலர் 1159-என்று பத்திரிகையில் அச்சிட்டுள்ள பத்திரிகை இலக்கத்தை எழுதியனுப்புகின்றார்கள். இதனால் சிலசமயங்களில் கடிதம் எழுதுவோர்களின் சரியானவிலாசத்தை யறிவது பிரயாசையாயிருக்கிறது. சந்தாதாரர்களின் இலக்கம் அவ்வவர்களுக்கு அனுப்பும் பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள காகிதத்தில் அவ்வவர்கள் விலாசத்தோடுசேர்த்து எழுதப்பட்டு அச்சிட்டு இருக்கிறது. இதனையே சந்தாதாரர்கள் தெரிவித்திடல் வேண்டும்.

---

## சிவாக்கிர பாஷியம்.

ஸ்ரீ சிவாக்கிர பாஷியம் என்பது வடமொழியிலுள்ள சிவஞானபோதத்துக்குத் திருக்கைலாசபரம்பரைக் கந்தபரமாசாரிய சந்தானத்து வாமதேவமுனிவர் மரபில் வந்த சூரியனார் கோயிலாதீனத்து ஸ்ரீமத் அதிவருணாசிரம ஆசாரிய வரியராகிய சிவாக்கிர யோகீந்திரரால் அருளிச்செய்யப்பட்ட விரிவுரையாகும். வடமொழியிலுள்ள சிவஞானபோதமே சைவசித்தாந்தத்துக்கு ஆதிமுதனூல் என்பது யாவருமறிந்த விஷயம். தமிழிலுள்ள சிவஞானபோதம் இதின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பினும் முதனூல் சிறந்ததென்பது சொல்லாமலே அமையும். இந்த நூலுக்குச் சிவாக்கிரயோகிகள் செய்த மாபாஷியமும் வடமொழியிலேயே உள்ளது. இதன் மாண்பையும் சிறப்பையும் நாம் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. தென்மொழிச் சிவஞானபோதத்துக்குத் திருவாவடுதுறை யாதீனத்துச் சிவஞான சுவாமிகள் செய்த திராவிட மாபாஷியம் என்னும் பேருரை இதனைப் பின்பற்றியதென்பரேல், இஃதெவ்வளவு சிறப்புவாய்ந்ததென்பதை ஒவ்வொருவரும் ஊகித்தறிந்துகொள்ளவமையும்.

இவ்வரிய பெரியநூல் இதுகாறும் அச்சிடப்படவில்லை. இந்நூலின் ஏட்டுப்பிரதிகளும் ஒன்றிரண்டிற்குமேல் இவ்வுலகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு மாரணதசை அணுகியுள்ள இந்நூலை அதனினின்றும் பிழைப்பித்து இவ்வுலகில் நீடூழிகாலம் நிலவச்செய்யுமாறு அச்சிட்டு வெளிப்படுத்த மேற்கூறிய சூரியனார் கோயிலாதீனத்து ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தித் தம்பிரானவர்கள் முன்வந்திருக்கின்றனர். இந்த மாபாஷியம் இப்போது கும்பகோணத்துள்ள அத்துவைதசபையின் பண்டிதராகிய ஸ்ரீமத்-க. கிருஷ்ண சாஸ்திரியாரவர்களைக்கொண்டு பரிசோதிப்பித்துக் கிரந்தாக்ஷரத்தில் அச்சிடப்பட்டு வருகின்றது. பின்னர் நாகராக்ஷரத்தில் அச்சிடப்படுவதுடன் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடப்படும்.

இவ்வரிய பெரிய கிரந்தத்தை வெளியிடுவதற்கு அதிக தொகைப் பொருள் வேண்டுமென்பது யாம் சொல்ல வேண்டுவதில்லை. வேண்டிய பொருளில்லாவிடின் கிரந்தம் முற்றுப்பெறுவது கடினசாத்தியமாகும். ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தித் தம்பிரானவர்கள் தம்மு பொருள்கொண்டே இவ்வேலையை முற்றுவிக்க வல்லவரல்லர். தம்பிரான் என்ற பெயர் மாத்திரையானே அவர் பொருளில ரென்பது போதருமன்றோ? ஆதலாற் சைவசமயிகளான நாமெல்லாரும் நம்மாலியன்ற பொருளுதவி செய்து தம்பிரானவர்கள் மேற்கொண்டுள்ள இவ்வேலையை முற்றுவித்தற்குக் கடமைப்பட்டவர்களாயுள்ளோம். நம்முள்ளும் சமயபரிபாலன நிமித்தம் தோன்றிய ஆதீனத்தார்கட்கும் சைவசித்தாந்த உணர்ச்சியை வளர்த்தற்பொருட்டுத் தோன்றிய சமாஜத்தார்கட்கும் இது முக்கியகடமையாகும். அவர்களெல்லாம் இப்பெரிய சிவ புண்ணியச் செயலைச் சிறிதும் பொருளின்மை காரணமாக இடையூறு படாதபடி முற்றுவிக்க ஒருவர்முன் ஒருவர் முந்துதல்வேண்டும். இக்காலத்துச் சைவசமயபரிபாலனத்தில் சிறந்து விளங்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிள்ளைமார்களின் பொருளுதவிக்கும் இது தக்கதொரு விஷயமாகும். அவர்களெல்லாம் ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தித் தம்பிரான் இக்காரியத்தில் பொருளுதவிக்குத் தம்மிடத்தில் வரும்படி வைத்துக்கொள்ளாது தாமே முன்சென்று பொருளுதவல் வேண்டும். பொருளுதவ விரும்புவோர் தஞ்சாவூர் ஜில்லா, திருமங்கலக்குடிப் போஸ்டு, சூரியனார் கோயிலாதீனம் ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தித் தம்பிரானுக்கு நேரே அனுப்புவார்களாக.

தி. த. கனக சுந்தரம் பிள்ளை, B. A.

---


## பித்தவாயு லேக்கியம்.

இதை அவரவர்கள் வயது, சரீரம், நோய், அநுபவம், அநுகூலங்களுக்கு ஏற்றபடி, காலை, அல்லது மாலை, அல்லது காலையு மாலையும், அல்லது போஜனத்திற்கு பிறகு, சிறு சிறு கெச்சைக்காயளவு சாப்பிட்டு வந்தால் பித்தவாயு பறந்தோடும். பசிதீபனமும் சரீரபுஷ்டியும் உண்டாம். இதுவே கைகண்ட தாதுபுஷ்டி மருந்துமாம். இதை அநுபவத்தாலறியலாம். இதற்குப் பத்தியமில்லை. 20-வேளை லேக்கியம் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1-0-0.

வி. பி. யில் அனுப்பினால் ஒரு டப்பிமுதல் மூன்று டப்பிவரையில் 4, அணா அதிகமாகும்.

இ. கண்ணப்பமுதலியார்,
நெ. 48, பாளையப்பன்வீதி, எழுகிணறு, சென்னை.